செ.வெ.எண்:05 நாள்: 02.10.2020

# அரியலூர் மாவட்டம்
# ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.64 இலட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுகாதாரத்துறையின் சார்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.64 இலட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் மருத்துவப்பணியாளர்களிடம் இன்று (02.10.2020) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.ராமஜெயலிங்கம்** அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இசிஜி (ECG), அல்ரா சோனோகிராம் (Ultra sonogram), செல் கவுன்டர் (Cell Counter), பெடல் டாப்லர் (Fetal Doppler), உள்ளிட்ட இருபது மருத்துவ உபகரணங்கள் வழங்குவதற்காக சுரங்கம் மற்றும் கனிம வளத்துறை நிதியிலிருந்து ரூ.64 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படும் இக்கருவிகள் மூலம் மாரடைப்பு போன்ற இருதய நோய்களை இசிஜி மூலம் முன்னரே கண்டறிந்து, அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு உயிரை காக்கவும், அல்ரா சோனோகிராம் கருவி மூலம் கர்ப்பணியி தாய்மார்களின் குழந்தையின் வளர்ச்சி, நீர் சத்து மற்றும் கர்ப்ப பையில் உள்ள சிக்கல்களை கண்டறியவும் உதவுகிறது. மேலும், செல் கவுன்டர் மூலம் இரத்த சோவை கண்டறிதல், உடலில் கிருமி நோய் தொற்று கண்டறிந்து ஆரம்பத்திலேயே சிகிச்சை அளிக்கவும், பெடல் டோப்லர் மூலம் கர்ப்ப காலத்தில் சிசு இருதய துடிப்பு கண்காணிப்பதன் மூலம் சிசு இறப்பதை தவிர்க்கலாம். ஆகவே, ஏழை, எளிய மக்களும் உயரிய மருத்துவ சேவை பெறும் நோக்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மருத்துவ சேவைக்கான அடிப்படை கட்டமைப்புகள் கிராம அளவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்கள் அனைவரும் இச்சேவையினை முறையாக பயன்படுத்திக்கொண்டு தங்களை நோய்நொடியிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும், இந்நிகழ்ச்சியில் அரியலூர் மாவட்டத்தில் செயல்படும் 448 நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களுக்கு சீல்ட் முககவசம் (Shield Face Mask) வழங்கும் பொருட்டு, 10 நபர்களுக்கு சீல்ட் முககவசம் (Shield Face Mask) மாவட்ட வழங்கல் அலுவலகம் சார்பில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் வழங்கினார்கள்

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், ஒன்றியக்குழுத்தலைவர் பு.செந்தமிழ்செல்வி, மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன் மற்றும் அரசு ஊழியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**